வணக்கம்

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர்-கிருஷ்ணமூர்த்தி ராமசாமி**

**தேதி 4.6.2024 நேரம் மாலை 6 மணி**

---

**தலைப்புச் செய்திகள்**

மக்களவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கையில், பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி, 89 தொகுதிகளில் வெற்றி பெற்று, 202 தொகுதிகளில், முன்னிலையில் உள்ளது. காங்கிரஸ் கட்சியை உள்ளடக்கிய இண்டியா கூட்டணி, 27 தொகுதிகளில் வெற்றி பெற்று 206 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது.

தமிழகத்தில், மொத்தமுள்ள 39 தொகுதிகளில், திமுக 21 தொகுதிகளிலும், காங்கிரஸ் 9 தொகுதிகளிலும் முன்னிலையில் உள்ளன.

புதுச்சேரி மக்களவை தொகுதியில், காங்கிரஸ் வேட்பாளர் திரு. வைத்திலிங்கம், 92 ஆயிரத்து 45 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை வகிக்கிறார்.

ஆந்திர சட்டமன்ற தேர்தலில் தெலுங்கு தேசம் கட்சியும், ஒடிசா சட்டமன்ற தேர்தலில் பாரதிய ஜனதாவும் முன்னிலையில் உள்ளன.

*முகப்பு*

கடந்த ஏப்ரல் 19 முதல், ஜூன் 1 வரையிலான காலத்தில், 7 கட்டங்களாக நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணிகள், நாடு முழுவதும், இன்று நடைபெற்று வருகின்றன. மக்களவைத் தேர்தலுடன் சேர்த்து ஒடிசா மற்றும் ஆந்திரப் பிரதேசத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் பதிவான வாக்குகளும், மற்றும், 25 சட்டமன்ற தொகுதிகளுக்கான இடைத் தேர்தலில் பதிவான வாக்குகளும் இன்றைய தினம் எண்ணப்படுகின்றன.

வாக்கு எண்ணிக்கை மையங்களில் மூன்றடுக்கு பாதுகாப்பு போடப் பட்டுள்ளதாகவும். ஒவ்வொரு வாக்கு எண்ணிக்கை மேசைக்கும் நுண் பார்வையாளர் நியமிக்கப்பட்டு, சிசிடிவி கேமரா கண்காணிப்புடன், வாக்கு எண்ணும் பணிகள் மேற்கொள்ளப் படுவதாகவும் தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ் குமார் தெரிவித்துள்ளார். இம்முறை மக்களவைத் தேர்தலில், 31 கோடி பெண்கள் உட்பட 64 கோடி வாக்காளர்கள் வாக்களித்து இருப்பதாகவும், இது, உலக அளவிலான சாதனை என்றும் அவர் கூறியுள்ளார்.

வாக்கு எண்ணிக்கை நிலவரங்கள் மற்றும் முடிவுகள் தேர்தல் ஆணையத்தின் அதிகாரப் பூர்வ இணையதளம், மற்றும், ஓட்டர் ஹெல்ப் லைன் செயலியில் கிடைக்கும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

*மொத்த நிலவரம்*

மக்களவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கையில், 120 தொகுதிகளுக்கான முடிவுகளும், 423 தொகுதிகளுக்கான நிலவரங்களும் வெளியாகி உள்ளன. பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி, 89 தொகுதிகளில் வெற்றி பெற்று, 202 தொகுதிகளில், முன்னிலையில் உள்ளது. காங்கிரஸ் கட்சியை உள்ளடக்கிய இண்டியா

கூட்டணி, 27 தொகுதிகளில் வெற்றி பெற்று 206 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது. இதர கட்சிகள் மற்றும் சுயேட்சைகள், 4 தொகுதிகளில் வெற்றி பெற்று 15 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளன.

*முன்னிலை- வேட்பாளர்*

வாரணாசி தொகுதியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி முன்னிலை வகிக்கிறார். காந்தி நகரில் மத்திய அமைச்சர் திரு. அமித் ஷா, லக்னோ தொகுதியில், மத்திய அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், மும்பை வடக்குத் தொகுதியில், மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் உள்ளிட்ட பிஜேபி தலைவர்கள், முன்னிலையில் உள்ளனர். காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி, ரே-பரேலி, வயநாடு ஆகிய தொகுதிகளிலும், சமாஜ்வாதி கட்சியின் தலைவர் திரு. அகிலேஷ் யாதவ், கனோஜ் தொகுதியில், முன்னிலையில் உள்ளனர்.

*பின்னிலை-வேட்பாளர்*

அமேதி தொகுதியில், மூத்த பிஜேபி தலைவர் திருமதி. ஸ்மிருதி இரானி, நீலகிரி தொகுதியில், மத்திய இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன், தென் சென்னை தொகுதியில், புதுச்சேரி முன்னாள் துணைநிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன், பாரமுல்லா தொகுதியில், தேசிய மாநாட்டு கட்சியின் மூத்த தலைவர் திரு. உமர் அப்துல்லா, அசன்சால் தொகுதியில், மூத்த திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் திரு. ஷத்ருகன் சின்ஹா ஆகியோர், பின்னடைவில் உள்ளனர்.

*மாநிலங்கள்-*

உத்தரப் பிரதேசத்தில் மொத்தம் உள்ள 80 மக்களவைத் தொகுதிகளில் இண்டியா கூட்டணி, 1 தொகுதியில் வெற்றி பெற்று, 44

தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது. தேசிய ஜனநாயக கூட்டணி, 3 தொகுதிகளில் வெற்றி பெற்று, 31 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது.

குஜராத் மாநிலத்தில், பிஜேபி வேட்பாளர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப் பட்ட சூரத் தொகுதி போக எஞ்சிய 25 மக்களவைத் தொகுதிகளில், பிஜேபி, 7 தொகுதிகளில் வெற்றி பெற்று, இதர 17 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது. 1 தொகுதியில் மட்டுமே, காங்கிரஸ் முன்னிலையில் உள்ளது.

மத்திய பிரதேசத்தில் மொத்தம் உள்ள 29 தொகுதிகளில் பிஜேபி 4 தொகுதிகளில் வெற்றி பெற்று, எஞ்சிய 25 தொகுதிகளிலும் முன்னிலையில் உள்ளது. டெல்லி தலைநகரப் பிரதேசத்திலும், மொத்தம் உள்ள 7 மக்களவைத் தொகுதிகளில், பாரதிய ஜனதா வேட்பாளர்கள் 3 தொகுதிகளில் வெற்றி பெற்று, இதர 4 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளனர்.

பஞ்சாபில் மொத்தம் உள்ள 13 தொகுதிகளில், ஆம் ஆத்மி உள்ளிட்ட இண்டியா கூட்டணி வேட்பாளர்கள், 4 தொகுதிகளில் வெற்றி பெற்று 6 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளன. தேசிய ஜனநாயக கூட்டணி அல்லாத, இதர வேட்பாளர்கள், 3 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளனர். ஜலந்தர் தொகுதியில், காங்கிரஸ் வேட்பாளர் திரு சரண்ஜித் சிங் சன்னி வெற்றி பெற்றுள்ளார். அவர் தமக்கு அடுத்தபடியாக வந்த பிஜேபி வேட்பாளரை விட, சுமார் 1 லட்சத்து 76 ஆயிரம் வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றார்.

ஜம்மு-காஷ்மீரில் மொத்தம் உள்ள 5 தொகுதிகளில் பிஜேபி 2 தொகுதிகளிலும், இண்டியா கூட்டணி, 2 தொகுதிகளிலும் முன்னிலையில் உள்ளன. லடாக் மக்களவைத் தொகுதியில் சுயேட்சை உறுப்பினர் ஹாஜி. ஹனிபா முன்னிலை வகிக்கிறார்.

பீகாரில் மொத்தம் உள்ள 40 தொகுதிகளில், தேசிய ஜனநாயக கூட்டணி, 2 தொகுதிகளில் வெற்றி பெற்று, 28 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது. ஆர்ஜேடி உள்ளிட்ட இண்டியா கூட்டணி வேட்பாளர்கள், 9 இடங்களில், முன்னிலையில் உள்ளனர்.

ஜார்கண்டில், மொத்தம் உள்ள 14 தொகுதிகளில், தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்கள், 9 இடங்களிலும், ஜேஎம்எம் உள்ளிட்ட இண்டியா கூட்டணி வேட்பாளர்கள், 5 இடங்களிலும் முன்னிலையில் உள்ளனர்.

அரியானாவில் மொத்தம் உள்ள 10 தொகுதிகளில், காங்கிரஸ் பிஜேபி ஆகிய இரு கட்சிகளும், தலா 5 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளன.

ராஜஸ்தானில் மொத்தம் உள்ள 25 தொகுதிகளில் பிஜேபி 11 தொகுதிகளில் வெற்றி பெற்று, 3 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது. இண்டியா கூட்டணி, 5 தொகுதிகளில் வெற்றி பெற்று, 5 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது. ஜெய்ப்பூர் தொகுதியில் பிஜேபி வேட்பாளர் திருமதி மஞ்சு ஷா வெற்றி பெற்றுள்ளார். அவர், தமக்கு அடுத்தபடியாக வந்த காங்கிரஸ் வேட்பாளரை விட, சுமார் 3 லட்சம் வாக்குகள் அதிகம் பெற்று, வெற்றி பெற்றனர்.

மகாராஷ்டிர மாநிலத்தில் மொத்தம் உள்ள 48 தொகுதிகளில், இண்டியா கூட்டணி, 1 தொகுதியில் வெற்றி பெற்று, 27 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது. 18 தொகுதிகளில் தேசிய ஜனநாயக கூட்டணி முன்னிலை வகிக்கிறது.

மேற்கு வங்கத்தில் மொத்தமுள்ள 42 மக்களவைத் தொகுதிகளில், திரிணமுல் காங்கிரஸ் 30 தொகுதிகளிலும், காங்கிரஸ், 1 தொகுதியிலும்,

முன்னிலையில் உள்ளன. பிஜேபி, 11 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது.

ஒடிசாவில் மொத்தம் உள்ள 21 மக்களவைத் தொகுதிகளில், பிஜேபி 19 தொகுதிகளிலும், காங்கிரஸ், 1 தொகுதியிலும், பிஜு ஜனதா தளம் 1 தொகுதியிலும் முன்னிலையில் உள்ளன.

கர்நாடகத்தில் மொத்தமுள்ள 28 மக்களவைத் தொகுதிகளில், தேசிய ஜனநாயக கூட்டணி, 17 தொகுதிகளிலும், இண்டியா கூட்டணி 10 தொகுதிகளிலும், முன்னிலையில் உள்ளன. சித்ரதுர்கா தொகுதியில் பிஜேபி வேட்பாளர் திரு கோவிந்த் கர்ஜோல் வெற்றி பெற்றுள்ளார். அவர் தமக்கு அடுத்தபடியாக வந்த காங்கிரஸ் வேட்பாளரை விட, சுமார் 48 ஆயிரம் வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றார். கேரளத்தில் மொத்தமுள்ள 20 தொகுதிகளில், இண்டியா கூட்டணி வேட்பாளர்கள் 19 தொகுதிகளிலும், 1 தொகுதியில், பிஜேபி வேட்பாளரும், முன்னிலையில் உள்ளனர்.

தெலங்கானா மாநிலத்தில் மொத்தம் உள்ள 17 தொகுதிகளில், பாரதிய ஜனதாவும், காங்கிரஸ் கட்சியும், தலா 8 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளன.

ஆந்திர பிரதேசத்தில் மொத்தம் உள்ள 25 மக்களவைத் தொகுதிகளில், 21 தொகுதிகளில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களும், 4 தொகுதிகளில், ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் வேட்பாளர்களும் முன்னிலையில் உள்ளனர்.

*தமிழ்நாடு*

கடைசியாக கிடைத்த தகவலின்படி, தமிழகத்தில், மொத்தமுள்ள 39 தொகுதிகளில், திமுக 21 தொகுதிகளிலும், காங்கிரஸ் 9 தொகுதிகளிலும் முன்னிலையில் உள்ளன., விடுதலைச் சிறுத்தைகள், சிபிஐ, சிபிஎம் ஆகிய

கட்சிகள் தலா 2 இடங்களில் முன்னிலையில் உள்ளன. மதிமுக, பாமக, மற்றும் ஐயுஎம்எல் வேட்பாளர்கள் தலா ஒரு தொகுதியில் முன்னிலையில் உள்ளனர்.

*தமிழ்நாடு-வேட்பாளர்கள்*

தமிழகத்தில் தூத்துக்குடி தொகுதியில் திருமதி கனிமொழி, ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் திரு டி ஆர் பாலு, மத்திய சென்னை தொகுதியில், திரு தயாநிதி மாறன், வடசென்னை தொகுதியில், டாக்டர் கலாநிதி வீராசாமி, தென்சென்னை தொகுதியில் திருமதி தமிழச்சி தங்க பாண்டியன், அரக்கோணம் தொகுதியில் திரு ஜகத் ரட்சகன் உள்ளிட்ட திமுக வேட்பாளர்கள் முன்னிலையில் உள்ளனர். சிவகங்கை தொகுதியில் திரு கார்த்திக் சிதம்பரம், கடலூர் தொகுதியில் திரு விஷ்ணு பிரசாத் ஆகிய காங்கிரஸ் வேட்பாளர்களும், சிதம்பரம் தனித் தொகுதியில் திரு தொல் திருமாவளவன், விழுப்புரம் தனித் தொகுதியில் திரு ரவிக்குமார் ஆகிய விடுதலை சிறுத்தைகள் கட்சி வேட்பாளர்களும் முன்னிலையில் உள்ளனர்.

தர்மபுரியில் பாமக வேட்பாளர் திருமதி சௌமியா அன்புமணி, திருச்சியில் மதிமுக வேட்பாளர் திரு துரை வைகோ, ஆகியோர் முன்னிலையில் உள்ளனர்.

*புதுச்சேரி*

புதுச்சேரி மக்களவை தொகுதியில் கடந்த ஏப்ரல் 19-ஆம் தேதி நடைபெற்ற தேர்தலில் பதிவான வாக்குகள், யூனியன் பிரதேசத்தின் அனைத்து 4 பிராந்தியங்களிலும் மொத்தம் 5 மையங்களில், இன்று எண்ணப்படுகின்றன. கடைசியாக கிடைத்த வாக்கு எண்ணிக்கை

நிலவரங்களின் படி, காங்கிரஸ் வேட்பாளர் திரு. வைத்திலிங்கம், 92 ஆயிரத்து 45 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை வகிக்கிறார். இதுவரை திரு. வைத்திலிங்கத்திற்கு 3 லட்சத்து 20 ஆயிரத்து 48 வாக்குகளும், அவருக்கு அடுத்தபடியாக உள்ள பிஜேபி வேட்பாளர் திரு. நமச்சிவாயத்திற்கு, 2 லட்சத்து 28 ஆயிரத்து 3 வாக்குகளும் கிடைத்துள்ளன. நாம் தமிழர் கட்சி வேட்பாளர் திருமதி மேனகா இதுவரை, 28 ஆயிரத்து 888 வாக்குகள் பெற்று, மூன்றாவது இடத்திலும், அஇஅதிமுக வேட்பாளர் திரு தமிழ்வேந்தன், 16 ஆயிரத்து 583 வாக்குகள் பெற்று, நான்காவது இடத்திலும் உள்ளனர்.

*வைத்திலிங்கம் கருத்து*

காங்கிரஸ் வேட்பாளர் திரு வைத்திலிங்கம், மகளிர் பொறியியல் கல்லூரி வாக்கு எண்ணிக்கை மையத்திற்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசுகையில், ஏனாம் தவிர புதுச்சேரியின் இதர எல்லா பிராந்தியங்களிலும் காங்கிரஸ் முன்னிலையில் இருப்பதாகவும், இதுகுறித்து தாங்கள் மகிழ்ச்சி அடைவதாகவும் கூறினார். புதுச்சேரி மட்டுமின்றி நாடு முழுவதும் இண்டியா கூட்டணி வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

*கருத்து*

காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் திருமதி ராகினி நாயக், இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில், இண்டியா கூட்டணி, மேலும் பல தொகுதிகளில் வெற்றி பெறும் என்றும், மத்தியில் ஆட்சி அமைக்க தேவையான 272 இடங்களில் வெற்றி பெற, தேசிய ஜனநாயக கூட்டணியால் இயலாது என்றும் கூறினார்.

நான்கைந்து சுற்று வாக்கு எண்ணிக்கையில் எதையும் சொல்ல இயலாது என்றும், எல்லா சுற்றுகளும் முடிந்த பின்னர் பிஜேபி நிச்சயம்

வெற்றி பெற்று, மத்தியில் ஆட்சியை தக்க வைத்துக் கொள்ளும் என்றும் பிஜேபி பொதுச் செயலர் திரு தருண் சுக் நம்பிக்கை வெளியிட்டார்.

*சட்டமன்றம்*

ஆந்திரப் பிரதேஷ் சட்டமன்ற தேர்தல் வாக்கு எண்ணிக்கையில், மாநிலத்தில் மொத்தமுள்ள 175 சட்டமன்ற தொகுதிகளில், தெலுங்கு தேசம் கட்சி, 131 இடங்களில் முன்னிலை வகிக்கிறது. ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் 17 இடங்களிலும், ஜனசேனா கட்சி 20 இடங்களிலும் முன்னிலையில் உள்ளன.

ஒடிசா சட்டமன்றத் தேர்தல் வாக்கு எண்ணிக்கையில், மாநிலத்தில் மொத்தமுள்ள 147 சட்டமன்றத் தொகுதிகளில், பிஜேபி 74 இடங்களிலும், பிஜூ ஜனதா தளம், 55 இடங்களிலும், காங்கிரஸ் 16 இடங்களிலும் முன்னிலையில் உள்ளன.

*சந்திப்பு*

இன்று வாக்கு எண்ணும் பணிகளுக்கு இடையில் மூத்த காங்கிரஸ் தலைவர்கள் திரு அபிஷேக் சிங்வி, திரு குர்ஷித் அன்வர் ஆகியோர் தலைமையிலான காங்கிரஸ் பிரதிநிதிக் குழுவினர் புதுடெல்லியில் தேர்தல் ஆணையத்தை சந்தித்தனர். பின்னர் திரு சிங்வி செய்தியாளர்களிடம் பேசுகையில், வாக்கு எண்ணிக்கை நிலவரம் பற்றிய தரவுகளை, தேர்தல் ஆணையத்தின் இணைய தளத்தில் அவ்வப்போது புதுப்பிக்கும் நடைமுறைகள், பிற்பகல் இரண்டரை மணிக்கு மேல் சரியாக செயல்படவில்லை என, கட்சித் தொண்டர்கள் மூலம் தமக்கு தகவல் கிடைத்திருப்பதாக தெரிவித்தார். வாக்கு எண்ணிக்கை மையங்களில் இருந்து வர வரப் புதிய தகவல்கள் இணைய தளத்தில் சேர்க்கப்படுவதாக,

தேர்தல் ஆணையம் விளக்கம் அளித்து இருப்பதாகவும், இதில் தாமதங்கள் இராது என உறுதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

**மீண்டும் தலைப்புச் செய்திகள்**

மக்களவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கையில், பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி, 89 தொகுதிகளில் வெற்றி பெற்று, 202 தொகுதிகளில், முன்னிலையில் உள்ளது. காங்கிரஸ் கட்சியை உள்ளடக்கிய இண்டியா கூட்டணி, 27 தொகுதிகளில் வெற்றி பெற்று 206 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது.

தமிழகத்தில், மொத்தமுள்ள 39 தொகுதிகளில், திமுக 21 தொகுதிகளிலும், காங்கிரஸ் 9 தொகுதிகளிலும் முன்னிலையில் உள்ளன.

புதுச்சேரி மக்களவை தொகுதியில், காங்கிரஸ் வேட்பாளர் திரு. வைத்திலிங்கம், 92 ஆயிரத்து 45 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை வகிக்கிறார்.

ஆந்திர சட்டமன்ற தேர்தலில் தெலுங்கு தேசம் கட்சியும், ஒடிசா சட்டமன்ற தேர்தலில் பாரதிய ஜனதாவும் முன்னிலையில் உள்ளன.]

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.